**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI**

Original Suit .. ..
H.M.O.P. .. ..
M.C.O.P. .. .. **Case No.OS. 101/2016**

Plaintiff **P.W.4**

Deposition of witness for Defendant
Court

| | | | |
|---|---|---|---|
| **Name** | திரு. முருகன் | **Caste** | : |
| **Father's Name** | திரு. ஞானசேகரன் | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 59/2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2024**

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன் . எனது சொந்த ஊர் நாட்டரசன் கோட்டை . எனது தந்தை ஓய்வு பெற்ற தலைமையாசியர் ஆவார். எனது தந்தையார் பணி ஓய்வு பெற்ற பின் நாட்டரசன் கோட்டை பேரூராட்சியில் 1997 – 2001 ஆண்டுகளில் துணை தலைவராக இருந்தார். என்னிடம் காட்டப்படும் கிரைய உடன்படிக்கை (வா.சா.ஆ1) யில் முதல் பக்கத்தில் 2 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளது எனது தந்தையார் ஆவார். அப்பொழுது சேர்மனாக இருந்தவர் ராதாகிருஷ்ணன் மனைவி உமையாள். நான் இளையான்குடி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

கிரைய உடன்படிக்கை (வா.சா.ஆ1) யில் முதல் பக்கத்தில் 2 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளது எனது தந்தையார் என்று நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளது அவ்வாறு எனது தந்தையார் கையொப்பம் செய்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை . எனது தந்தையார் வா.சா.ஆ 1ல் கையொப்பம் செய்த காலகட்டத்தில் எனக்கு என்ன வயது என்றால் சுமார் 36 வயதிருக்கும். வா.சா.ஆ 1ல் உள்ள சாட்சி கையொப்பம் எனது தந்தையாருடையது தான் என்பது ஒப்பிட்டு பார்பதற்கு வேறு

ஏதேனும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை . வேண்டுமென்றே சொத்தை அபகரிப்பதற்காக வாதி உற்பத்தி செய்த பேப்பர் வா.சா.ஆ 1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2024.03.01 17:30:42 +0530